**கல்வி அமைச்சு**

அமைச்சர்

315 Front Street West
Toronto ON M7A 0B8

**Ministère de l'Éducation**

Ministre

315, rue Front Ouest
Toronto ON M7A 0B8

Ontario

ஆகஸ்ட் 26, 2020

அன்புள்ள பெற்றோரே,

பாடசாலைக்கு திரும்புதல், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்குப் பாதுகாப்பானதாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். பாடசாலைகளை மீளவும் திறப்பதற்கான எங்களின் விரிவான திட்டம் வலுவான பொதுச் சுகாதார நெறிமுறைகள் மற்றும் மாணவர்கள் ஒவ்வொருவருக்குமான நிதியளிப்புடன்கூடிய நாட்டின் சிறந்த திட்டங்களில் ஒன்றாக உள்ளது.

தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (PPE), எங்களின் பாடசாலைகள் மற்றும் பேருந்துகளைச் சுத்தம்செய்தலை மேம்படுத்துதல், காற்றோட்டத்தை மேம்படுத்துதல் மற்றும் அதிகமான சுத்தம்செய்யும் மற்றும் கற்பிக்கும் பணியாளர்களை பணியமர்த்தலுக்காகப் பணம் பயன்படுத்தப்படும். எங்களின் பாடசாலைகளில் 500 பொதுச் சுகாதாரச் செவிலியர்களை பணிக்கமர்த்தல், தரம் 4-12 மாணவர்களுக்குத் தீவிரமான கட்டாய முகக் கவசக் கொள்கை மற்றும் எங்களின் இரண்டாம்நிலைப் பாடசாலை மாணவர்கள் மீதான கண்காணிப்புச் சோதனை உத்தி போன்ற மேலதிகமான பொதுச் சுகாதார நெறிமுறைககளையும்கூட நாங்கள் சேர்த்துக்கொள்கிறோம். எங்கள் வகுப்பறைகளுக்கு வெற்றிகரமாகத் திரும்புவதை உறுதி செய்வதற்கு இந்த நடவடிக்கைகள் அவசியம் என்று நாங்கள் நம்புகிறோம்.

எங்களின் பாடசாலைகளில் COVID-19 பரவலைத் தடுப்பது மற்றும் குறைப்பது மற்றும் எங்களின் பிள்ளைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது எப்படி என்ற விபரங்களை எங்களின் அரசாங்கம் இன்று அறிவித்திருக்கிறது. இந்த ஆவணம் தலைமை மருத்துவ அதிகாரி உள்ளடங்கலான முன்னணி மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞான நிபுணர்களின் ஆலோசனைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது.

எங்களின் அரசாங்கத்தின் பாடசாலைக்குத் திரும்பிச்செல்லும் திட்டம், இலையுதிர்காலத்தில் வகுப்புக்குத் திரும்புவதை ஆதரிப்பதற்கான மத்திய அரசின் மேலதிக முதலீடுகள் மற்றும் ஆதாரவளங்களால் மேலும் மேம்படுத்தப்படுகிறது. மத்தியஅரசின் இன்றைய அறிவிப்பு பாடசாலைக்குத் திரும்பிச்செல்லும் திட்டத்தை ஆதரிப்பதற்காக

...ப/2

மாகாணத்தால் வழங்கப்பட்ட அண்ணளவான 900 மில்லியன் டொலருக்கும், மேலதிகமாக 381 மில்லியன் டொலர்களை ஒன்ராறியோவிற்கு வழங்குகிறது.

எங்களின் பாடசாலைகளுக்குள் ஏதாவது சவால்கள் இருப்பின் அவற்றுக்கு எதிரவினையாறறுவதறகான மாகாணத்தின முயற்சிகளுக்குத் தலைமை தாங்குவதற்காக மாகாணரீதியான பரவலுக்கு எதிரவினையாறறும ஒருங்கிணைப்பாளராக Dr.Dirk Huyer நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும் உறுதிபபடுத்துவதில நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டியவை இதோ:

- தனிமைப்படுத்துதல், மற்றும் நோய்வாய்ப்பட்ட மாணவர் மற்றும் அவரைக் கவனிக்கும் பணியாளருக்கு PPE வழங்குதல் உள்ளடங்கலாக, பாடசாலையில் இருக்கும்போது நோய்வாய்ப்படும் மாணவர்களைக் கையாள்வதற்கான நெறிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு நாளும் பிள்ளகளைப் பாடசாலைக்கு அனுப்ப முன்பாக அவர்களைப் பரிசோதிக்கும்படியும் அவர்கள் நலமில்லாமல் இருந்தால், அவர்களை வீட்டிலேயே வைத்திருக்கும்படியும் பெற்றோர் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.
- பாடசாலையில் யாராவது ஒருவரின், அவர் ஒரு மாணவராக இருந்தாலென்ன அல்லது பணியாளராக இருந்தாலென்ன COVID-19 பரிசோதனை முடிவுகள் நேர்மறையாக இருந்தால், பாடசாலைச் சமூகத்தினருககு அது முறையாக அறிவிக்கப்படும். உடனடியான மற்றும் தீவிரமான தொடர்புத் தடமறிதல் ஆரம்பிக்கப்படும்.
- தேவைப்படும்போது, வகுப்புக் குழுக்கள் பரிசோதனைக்குப் பரிந்துரைக்கப்படுவார்கள், வீட்டிற்கு அனுப்பப்படுவார்கள்,அல்லது மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் திரும்பி வருவது பாதுகாப்பானது என்று பொதுச் சுகாதாரஅதிகாரிகள தீர்மானிக்கும் வரை பாடசாலை மூடப்படும்.
- தெளிவானதொரு தகவல்தொடர்புச் செயல்முறை பின்பற்றப்படும், எனவே உங்களின் பிள்ளையின் பாடசாலையில் ஒரு மாணவரின் அல்லது பணியாளரின் COVID-19 பரிசோதனை முடிவுகள் நேர்மறையாக இருந்தால் அதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.
- இற்றைப்படுத்தல்கள் பற்றி நிகழநேரத்தில தொடர்புகொள்வதற்கும், ஒரு வகுப்பு அல்லது பாடசாலை மூடப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்குமாகப் பாடசாலைச் சபையினர் பொதுச் சுகாதார பிரிவினர்களுடன் நெருக்கமாகச் செயல்படுவர்.

- ஒன்ராறியோப் பொதுச் சுகாதாரத்தினரின் தலைமையில், எங்களின் பாடசாலைகளில் அறிகுறியற்ற இரண்டாம்நிலை மாணவர்களைக் கண்காணிப்புச் சோதனைகளை நடத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.
- எங்களின் பாடசாலைகளில் பொதுச் சுகாதாரச் செவிலியர்களைக் கொண்டிருப்பதற்கு மேலாக, கல்விபுகட்டும் பணியாளர்களும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான தொழில்ரீதியான பயிற்சியை நிறைவுசெய்திருப்பார்கள்.

நாங்கள் எச்சரிக்கையாக இருக்கிறோம், மேலதிக சுகாதாரமற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை நாங்கள் செயல்படுத்துகிறோம், அத்துடன் தேவையான பணத்தை நாங்கள் முதலீடுசெய்கிறோம். மாகாண முதல்வரும் நானும் முன்பு கூறியது போல்: எதைச் செய்ய வேண்டுமோ அதை நாங்கள் செய்வோம், அத்துடன் ஒன்ராறியோ மாணவர்களின் பாதுகாப்பு, பத்திரம் மற்றும் நல்வாழ்வுக்கு நாங்கள் ஆதரவளிப்போம்.

ஒன்ராறியோ முழுவதிலும் உள்ள பொதுச் சுகாதார நிலைமை தொடர்ந்து மாறிக்கொண்டிருக்கும் அதேவேளையில்,எங்கள் சமூகத்தவர்களையும் மாகாணத்தவர்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான பெற்றோர், மாணவர்கள் மற்றும் பாடசாலைப் பணியாளர்களின் ஒன்றிணைந்த முயற்சியே ஒரு மாறிலியாக உள்ளது. நாங்கள் அனைவரும் எங்களின் பங்கைச் செய்கிறோம், ஒன்ராறியோ முழுவதும் COVID-19 பரவல் குறையும் அதேவேளையில் எங்களால் அடையக்கூடியவை உண்மையிலேயே குறிப்பிடத்தக்கவையாக உள்ளன.

உங்களின் பிள்ளைக்கு இந்த காலம் எவ்வளவு சிரமமானதாக இருக்கிறது என்பதை நாங்கள்அறிவோம், அதனால் மன ஆரோக்கியத்துக்கான முதலீடுகளை நாங்கள் அதிகரித்துள்ளோம். கிடைக்கின்ற ஆதரவுகளுக்கான அணுகல் கிடைப்பதையும், எங்களின் மாணவர்களின் இதயங்களிலும் மனங்களிலும் உள்ளடக்கல், இரக்கம் மற்றும் நம்பிக்கையை எங்களின் பாடசாலைகள் தொடர்ந்து பிரதிநிதித்துவப்படுத்துவதையும் நாங்கள் தொடர்ந்து உறுதி செய்வோம் .

இந்தப் பாடசாலை ஆண்டிலும் மற்றும் எதிர்காலத்திலும் எங்களின் பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் வெற்றிக்காக நாங்கள் இணைந்து பணியாற்றும்போது- நீங்கள் ஒவ்வொரு நாளும் செய்யும் அனைத்துக்கும் ஒன்ராறியோ பெற்றோருக்கு நன்றி.

உண்மையுள்ள,

மதிப்புக்குரிய Stephen Lecce,
கல்வி அமைச்சர்